# தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாறு

## [1951-2000]

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்படும்

முனைவர் பட்டத்திற்கான

ஆய்வுச்சுருக்கம்

ஆய்வாளர்

**இ. நந்தமிழ் நங்கை**

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை – 600 005

**ஜூலை –2008**

## உள்ளுறை

ஆய்வுப் பொருள்

ஆய்வு நோக்கம்

ஆய்வு எல்லை

ஆய்வு முறை

ஆய்வேட்டின் அமைப்பு

இயல் ஒன்று

இயல் இரண்டு

இயல் மூன்று

இயல் நான்கு

இயல் ஐந்து

மதிப்பீடு

## ஆய்வுப் பொருள்

இன்று இலக்கியச்சூழலில் மிகப் பரவலாக பேசப்படுகின்ற பொருண்மை பெண்ணியமாகும். தனது உரிமையைக் கோரியும் சமத்துவத்தை நோக்கியும் செயல்படுவது. எழுத்தறிவும் கல்வியறிவும் வெளியுலகத் தொடர்பினைச் சாத்தியமாக்கியதன் விளைவாகத் தமது நிலையை உணரத்தலைப்பட்ட பெண்கள் தம்மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடவும் தொடங்கினர்.

மேலைநாடுகளில் எழுந்த பெண்ணிய எழுச்சிச் சிந்தனைகள் இங்கும் வேரூன்றியதன் விளைவாக 'பெண்ணியம்' குறித்த சொல்லாடல்கள் தமிழ்ச் சூழலில் முன்னெடுக்கப்பட்டன. சமூகத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் அறிவியல், கலை, அரசியல், பொருளாதாரத் துறைகளில் பங்கெடுத்து வருகின்றனர். இன்றைய பொருளாதாரத் தேவையும் சுயம் சார்ந்த விழிப்பும் அவர்களை வெளியுலகில் செயல்பட வைத்திருக்கிறது.

பெண்களைப் பற்றிய பதிவுகள் இதுவரை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தப்பெறவில்லை; அறியப்பெறவில்லை. மேலும் இலக்கியப்புலத்தில் பெண் எழுத்தாளர்களின் பணியும் அந்த அளவில் பெரிய கவனத்தைப் பெறவில்லை. இந்தச் சூழலில்தான் பெண்எழுத்து பற்றிய ஆவணத்தேவை எழுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1951–2000) தமிழ் இலக்கியத்தளத்தில் இயங்கிய பெண்களைப் பற்றிய தரவுகளைச் சேகரித்து ஆய்வு மேற்கொள்வதன்மூலம் அக்கால எழுத்துப் பணியை நாம் மதிப்பிடமுடியும். இந்த நோக்கத்தோடே தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

இரண்டாயிரமாண்டு காலத்திற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றைக் கூர்ந்து நோக்கும்போது, அதில் இடம்பெறும் பெண்கள் மிகக் குறைவானவர்களே. வரலாற்றில் அவர்களுக்கான இடமும் இலக்கிய வெளிப்பாடும் குறுகியதாக, வரையறைக்கு உட்பட்டதாக இருந்துள்ளன. சங்க இலக்கியத் தொகுப்பில் பாடியவர்களாக, நமக்குக் கிடைக்கும் நாற்பதிற்கும் மேற்பட்ட (ஆய்வறிஞர்களின் கணிப்பில் இவ்வெண்ணிக்கை வேறுபடுகிறது) பெண்பாற்புலவர்களிலிருந்துதான் பெண்எழுத்து வரலாற்றைத் தொடங்குகிறோம். அவர்களுக்குப் பிறகு பக்தி இலக்கிய காலத்தில் சைவத்திற்குக் காரைக்கால் அம்மையாரும் வைணவத்திற்கு ஆண்டாளும் அறியப்படுகின்றனர். இவர்களை அடுத்து பிற்கால நீதி நூல்களைப் பாடிய ஔவையாரைப் பற்றிப் பேசுகிறோம். அதற்குப் பிறகான காலங்களில் – பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை பெண்களின் பங்களிப்பு பற்றிய எந்தத் தரவும் தகவலும் இல்லை. நெடிய மௌனம் மட்டுமே கிடைக்கிறது.

பெண்எழுத்து வரலாற்றைக் கட்டமைக்கத் தேவையான தரவுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே தெரியவருகின்றன. ஐரோப்பியர் வருகை, ஐரோப்பியக் கல்வி ஏற்படுத்திய மாற்றம், சிறிது சிறிதாகத் தொடங்கிய சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் போன்றவற்றால் பெண் கல்வி, பெண்களுக்கான சுதந்திரம் போன்றவை வலுப்பெற்றன. இவ்விதம் கல்வி கற்ற பெண்கள் படைப்புத்தளத்தில் செயல்படத் தொடங்கினர். அவர்களைப் பற்றிய தரவுகள் இதுவரை முழுமையாகத் தொகுக்கப் பெறவில்லை. விடுதலைக்குமுன் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலும் விடுதலைக்குப்பின் சற்றுக் கூடுதலாகவும் பெண் படைப்பாளர்கள் அறியப்படுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் அருகியிருந்த புனைகதைவடிவம் போகப்போக அனைத்துப் படைப்பாளர்களாலும் கைக்கொள்ளப்பட்டு எண்ணிக்கையளவில் மிக ஆரம்பிக்கிறது. இதுபோன்றே கவிதையும் செய்யுள் வடிவத்திலிருந்து தளர்ந்து நூற்றாண்டின் இறுதியில் பல பெண்கவிஞர்கள் உருவாகச் சாத்தியமாக்கியதோடு பரிணாம வளர்ச்சியும் கண்டது.

இதழியலின் வளர்ச்சி பெண் படைப்பாளர்கள் பலரைச் சமூகத்தில் அடையாளப்படுத்தியது. வெகுசனப்போக்கு, தீவிர இலக்கியப்போக்கு சார்ந்து இரு பிரிவுகளிலும் பெண் படைப்பாளர்கள் உருவாகினர். மேலைத்தேயத் தொடர்பினால் தமிழுக்கு வரப்பெற்ற பெண்ணியம், பெண் மொழி, பெண்எழுத்து குறித்த கருத்துருவாக்கங்கள் படைப்புத் தளத்திலும் மாற்றத்தைக் கொண்டுவந்தன. கோட்பாட்டளவில் உருவான பிறவும்

படைப்புகளைப் பாதித்தன. 1950களுக்குப் பிறகு படைப்பாளர்களாக நன்கு அறியப்பெறும் இராஜம் கிருஷ்ணன், ஆர்.சூடாமணி, அம்பை, அநுத்தமா, லஷ்மி போன்றோர் மட்டுமின்றி வெகுவாக அறியப்படாத / கவனிக்கப்படாத பிற பெண்எழுத்தாளர்களைப் பற்றிய தரவு சேகரித்தலும் ஆவணப்படுத்துதலும் தமிழிலக்கிய வரலாற்றில் இருக்கும் இடைவெளியை நீக்குவதற்கு, அறியப்படாது இருப்பவற்றை வெளிக்கொணர்வதற்கு உதவும். இப்பணியின் முழுமையை – முழுமைக்கு நெருக்கமான நிலையை அடையத் துணைபுரியும் ஆவணங்களின் உதவியோடு தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாற்றை இயன்ற அளவு கட்டமைக்க முடியும். இது நம்பகத்தன்மை உடையதாயும் அதன்மூலம் விரிவான பிற்கால ஆய்வுகளுக்கு அடித்தளமாயும் அமையும்.

## ஆய்வு எல்லை

1951 முதல் 2000 வரையிலான காலகட்டத்தில் தமிழ்ச் சூழலில் வெளிவந்த இதழ்களிலிருந்து திரட்டப்பட்டுள்ள கதைகள், கட்டுரைகள், கவிதைகள், பிற எழுத்து வடிவங்கள் இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு நிகழும் காலம் கருதி, இவ்வாய்விற்கு மாத இதழ்களும் சில மாதம் இருமுறை வெளிவரும் இதழ்களும் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வார இதழ்கள், நாளேடுகள் போன்றவை இக்காலகட்டத்தில் கணக்கிலடங்காமல் வெளிவந்துள்ளன. மேலும்

அவற்றில் இடம்பெறும் படைப்புகளில் ஆய்வுக்குத் தேவைப்படும் ஆழமான பொருளைக் காண்பதும் அரிதாகவே உள்ளது. ஆகவே அவை தவிர்க்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்குத் தேவையான, இலக்கியப் பரப்பில் மிகுந்த ஈடுபாட்டோடு செயல்பட்டுள்ள சில பெண்படைப்பாளிகளின் அச்சு நூல்கள், அவர்களின் பெண்எழுத்துத்தன்மையை மேலும் அறிதற்பொருட்டு பயன்படுத்தப் பட்டுள்ளன. இவை துணைமை ஆதாரங்களாகின்றன.

## ஆய்வு முறை

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் (1951–2000) வெளிவந்த தமிழ் இதழ்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாற்றைக் கண்டறிய முற்படும் இவ்வாய்வு வரலாற்று முறைத் திறனாய்வையும் பெண்ணியக் கோட்பாடு சார்ந்த திறனாய்வையும் ஆய்வு முறைமைகளாகக் கொண்டமைகிறது.

## ஆய்வேட்டின் அமைப்பு

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் வெளிவந்த இதழ்களில் தம்மை உட்படுத்திக்கொண்ட, பெரும்பாலும் அறியப்படாத பெண் எழுத்தாளர்களின் எழுத்துகளை வரலாற்று நோக்கில் ஆவணப்படுத்தி

ஆராயும் இவ்வாய்வு ஐந்து இயல்களாக அமைகின்றது. பெண்களுக்கும் இதழ்களுக்குமான தொடர்பு, இதழியலில் அவர்கள் செயல்பட்ட தன்மை போன்றவற்றை வரலாற்று முறைப்படி ஆராய்வதை ஒரு பகுதியாகவும் இதழ்களில் பெண்கள் எழுதியவற்றை ஆராய்வதை மற்றொரு பகுதியாகவும் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. அவ்வகையில், முதல் பகுதியில் பெண்களுக்கும் இதழ்களுக்குமான ஊடாட்டங்கள் ஓர் இயலில் ஆராயப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் பெண்எழுத்தாளர்களின் புனைகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புகள், கட்டுரைகள் மற்றும் பிற எழுத்து வடிவங்கள் போன்றவை அடுத்தடுத்த இயல்களாக அமைக்கப்பட்டுப் பகுத்து ஆராயப்படுகின்றன.

இதழியலும் பெண் எழுத்துக்களும் முதல் இயலாக அமைகிறது. புனைகதை, கவிதை, மொழிபெயர்ப்பு, பிறஎழுத்து வடிவங்கள் ஆகியவை அடுத்தடுத்த இயல்களாக அமைகின்றன.

மேற்குறிப்பிட்ட இயல்களில் சுட்டப்பெறும் பெண் எழுத்தாளர்கள் குறித்த விவரணங்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இயல் ஒன்று

இவ்வியலில், இருபதாம் நூற்றாண்டில் ஜனநாயகத் தன்மை பெற்றுப் பொதுமக்களின் பார்வைக்குப் பரவலாகச் சென்றடைந்த இதழ்களில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்துள்ளது என்பது பற்றி ஆய்வு

செய்யப்படுகிறது. பெண்கல்வியும் சுதந்திரமும் எழுத்தறிவும் சாத்தியப்பட்ட நிலையில், கல்வி கற்ற பெண்கள் எவ்வாறு வாசகராகவும் எழுத்தாளர்களாகவும் மட்டுமின்றி விமர்சகர்களாகவும் இருந்து இதழியலின் தேவைக்கேற்ப புதிய வடிவங்களில், உள்ளடக்கங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர் என்பது இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

## இயல் இரண்டு

இவ்வியலில், **1951 – 2000** காலப் பகுதியில் வெகுசன மாத இதழ்களிலும் சிறுபத்திரிகைகளிலும் புனைகதையாசிரியர்களாக (நாவல், தொடர்கதை, சிறுகதை, சிறுவர் கதை, சரித்திர / புராண நிகழ்வுக் கதை) அறியப்பட்ட பெண்எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்களுடைய புனைகதைகள்சார் எழுத்துப் பணியைப் பற்றியும் இவ்வியல் ஆராய்கின்றது.

## இயல் மூன்று

ஆய்வு நிகழும் காலகட்டத்தில் இதழ்களில் வெளிவந்த பெண் எழுத்தாளர்களின் கவிதைகள் பற்றியும் செய்யும், வசன கவிதை, புதுக்கவிதை எனத் தொடர்ந்த மாற்றங்களோடு இன்று நவீனகவிதையாக வரையறுக்கப்படும் வடிவத்திற்குப் படிப்படியாக கவிதை வளர்ச்சி பெறுவதும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்த பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளுக்குத் தொடக்கப்புள்ளியாக, இதழ்களில் வெளிவந்த

அவர்களின் கவிதைக்குக் கிடைத்த அங்கீகாரமும் ஊக்குவிப்பும் எதிர்ப்பும் எவ்வாறு காரணமாயின என்பதும் விவாதிக்கப்படுகின்றன.

## இயல் நான்கு

1951–க்கு முற்பட்ட காலப்பகுதியில் பெரிதும் இடம்பெறாத ஒரு பகுதி மொழிபெயர்ப்பாகும். பிறமொழி இலக்கியங்களோடு எளிதில் ஊடாடுவதற்கு மொழிபெயர்ப்பு சரியானதொரு கருவியாக விளங்கியது. சரஸ்வதி ராம்னாத், சீதாதேவி, ரிஷி, வ.கீதா, அ.மங்கை, அமரந்தா உள்ளிட்ட பல பெண் எழுத்தாளர்கள் பிறமொழிக் கதைகளையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் ஆய்வுகளையும் மொழிபெயர்த்துள்ளனர். பெண் மொழிபெயர்ப்பாளர்களைப் பற்றியும் மொழி பெயர்க்கப்பட்ட எழுத்துகளைப் பற்றியும் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

## இயல் ஐந்து

1951–2000 வரை வெளிவந்த இதழ்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்மூலம் கிடைக்கப்பெற்ற பெண் எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு, புனைகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புகள் தவிர்த்து இதழ்களில் பிறவடிவங்களாக இடம்பெறும்

கட்டுரை, நாடகம், உரையாடல், குறிப்பு / ஆலோசனை, துணுக்குச் செய்தி, விவாதம், நேர்காணல், விமர்சனம் எனப் பகுத்துப் பார்க்கப்பட்டு ஆராயப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தமிழ் இதழ்களில் சேகரிக்கப்பட்ட தரவுகளின்வழி எழுதியவர்களாக எண்ணற்ற பெண்கள் இருந்திருப்பதையும் வெகுசனத் தன்மையும் இலக்கியத்தன்மையும் எதிரெதிர் திசைகளில் பெண்எழுத்தாளர்களைக் கொண்டுசென்றுள்ளதையும் இவ்வாய்வு உணர்த்துகிறது. ஆய்வு மதிப்பீட்டுப் பகுதியில் மேற்குறிப்பிட்ட அனைத்தும் விவாதிக்கப்படுகின்றன. மதிப்பீட்டிற்கு அடுத்ததாகத் துணைநூற்பட்டியலும் பின்னிணைப்புப் பகுதியும் அமைகின்றது.